Sri MANAKULA VINAYAGAR
Medical college and Hospital

MANA - KURAL

*Kalitheerthalkuppam, Madagadipet, Puducherry- 605107*

*The official podcast of SMVMCH*

**Name of Resource person:** Dr.P.NALLAMUTHU

**Podcast Title:** EYE DONATION

**Department:** OPHTHALMOLOGY

**Category:** PUBLIC EDUCATION AND AWARENESS

**TRANSCRIPT**

Hello Everyone, This is **Dr.P.NALLAMUTHU** , talking about **EYE DONATION**

வணக்கம்

இந்தியாவில் 7 கோடி மக்கள் பார்வையற்றவர்களாக இருக்கின்றனர்.அதில் கருவிழி பாதிப்பால் முழுவதும் பார்வை இழந்தவர்கள் 68 லட்சம் பேர்.பார்வை இழப்பில் 75 விழுக்காடு தடுக்க கூடியது .கருவிழி மாற்று சிகிச்சையின் மூலம் இழந்த பார்வையை திரும்ப பெறலாம்.ஆனால் தேவையில் 50 விழுக்காடு கண்களை மட்டுமே தானமாக பெற முடிகிறது.

கண்தானம் பற்றிய விழிப்புணர்வு மக்களிடையே குறைவாக உள்ளதே இதற்கு காரணம். இதன் அடிப்படையில் இந்திய அரசாங்கம் கண்தானம் குறித்த விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்தும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 8 ஆம் நாளை தேசிய கண் கொடை நாளாகவும், இந்நிகழ்வை ஆகஸ்ட் 25 முதல் செப்டம்பர் 8 வரை தேசிய கண் தான இரு வார விழாவாக கடைப்பிடிக்கவும் அறிவுறுத்தியுள்ளது.

தானத்தில் சிறந்தது உறுப்பு தானம். ஒருவரது இறப்பிற்கு பின் பல்வேறு உறுப்புகள் தானம் அளிக்கப்படலாம். இத்தகைய உறுப்புகளில் கண் மிகவும் இன்றியமையாதது. ஒருவரது இறப்பிற்குப் பிறகு கண்களை தானம் செய்வதன் மூலம் கருவிழி பாதிப்பால் பார்வையிழந்த நால்வர் உலகினை பார்த்து மகிழும் வாய்ப்பினை பெற முடியும். வயது வரம்பு இன்றி எவரும் கண்தானம் செய்யலாம்.கண் தான உறுதி மொழியை நாம் வாழும் போதே அளிக்கலாம். ஆனால் இறப்பிற்குப் பிறகே கண் தானம் பெறப்படும்.

கண்களை தானமாக வழங்க விரும்புவோர் விருப்பப் படிவம் பெற்று உறுதிமொழி எடுக்கவும், பிற சந்தேகங்களுக்கும் ஸ்ரீ மணக்குள விநாயகர் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையின் கண் வங்கி பிரிவை அணுகலாம்.

“கண் தானம் செய்வோம்;விழியிருந்தோர் வாழ்வில் ஒளி ஏற்றுவோம்”.

“மண்ணில் புதைப்பதை மற்றவர் கண்ணில் விதைப்போம்”.

நன்றி வணக்கம்

Signature of the Resource Person
Dr. P.NALLAMUTHU, M.S.,D.O.,
Regd. No: 34734
Professor & HOD
Department of Ophthalmology
Sri Manakula Vinayagar Medical College & Hospital
Kalitheerthalkuppam, Madagadipet, Puducherry-605107.

Signature of the HOD
Dr. P.NALLAMUTHU, M.S.,D.O.,
Regd. No: 34734
Professor & HOD
Department of Ophthalmology
Sri Manakula Vinayagar Medical College & Hospital
Kalitheerthalkuppam, Madagadipet, Puducherry-605107.